

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 06.02.2026


# அடிபணிந்த பிரதமர் மோடி!

இந்திய இறக்குமதிப் பொருட்களுக்கு 50 விழுக்காடு வரியை அமெரிக்க அதிபர் டிரம்ப் விதித்தார். இந்தியாவுக்கு மட்டுமல்ல, உலகின் பல நாடுகளுக்கு இது போன்ற வரியை அவர் விதித்தார். இதனை உலகின் பல நாடுகள் கண்டித்தன. எதிர்த்துள்ளன. விமர்சித்தன. பதில் நடவடிக்கைகளில் இறங்கின. ஆனால் இதில் எதையும் செய்யவில்லை ஒன்றிய பா.ஜ.க. அரசு.

இப்படி வரி விதிப்பதை நிறுத்த வேண்டுமானால், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கக் கூடாது என்ற நிபந்தனையை விதித்தார் அமெரிக்க அதிபர் டிரம்ப். இந்த நிபந்தனையை எதிர்த்தாவது ஒன்றிய பா.ஜ.க. அரசு கருத்துச் சொல்லி இருக்க வேண்டும். மாறாக பேச்சுவார்த்தை நடத்துகிறோம் என்று நாள் கடத்திக் கொண்டு இருந்தார்கள்.

ஒன்றரை ஆண்டு கால கண்ணாமூச்சி ஆட்டத்துக்கு பிப்ரவரி 2 ஆம் தேதியன்று முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அமெரிக்காவின் அனைத்து விருப்பங்களுக்கும் முழு சம்மதம் தெரிவித்து அடிபணிந்து விட்டார் பிரதமர் மோடி.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், “பிரதமர் மோடியுடன் தொலைபேசியில் பேசினேன். ரஷ்யா - உக்ரைன் போர் உட்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருவரும் விவாதித்தோம். ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்திக் கொள்ள பிரதமர் மோடி சம்மதம் தெரிவித்தார். இனிமேல் அமெரிக்காவிடம் இருந்து அதிக கச்சா எண்ணெய்யை இந்தியா வாங்கும். வெனிசுலாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவது குறித்தும் நாங்கள் ஆலோசித்தோம். இந்த நடவடிக்கைகள் உக்ரைன் போரை நிறுத்த உதவி செய்யும்.

பிரதமர் மோடியுடன் எனக்கு நட்புறவு நீடிக்கிறது. அவர் மீது மிகுந்த மரியாதை வைத்துள்ளேன். அமெரிக்கா - இந்தியா இடையே வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்ய நாங்கள் ஒப்புக் கொண்டோம். இதன்படி இந்தியப் பொருட்களுக்கு அமெரிக்க அரசு இனி 18 சதவீத வரியை மட்டுமே விதிக்கும். அமெரிக்காவிடம் இருந்து 500 பில்லியன் டாலர் மதிப்பிலான எரிசக்தி, தொழில்நுட்பம், வேளாண் விளைபொருட்கள், நிலக்கரி மற்றும் இதர பொருட்களை வாங்க இந்தியா ஒப்புக் கொண்டிருக்கிறது. அமெரிக்கா, இந்தியா இடையிலான உறவு மேலும் வலுவடையும்” என்று டிரம்ப் தெரிவித்துள்ளார்.

**இருநாட்டு ஒப்பந்தத்தை அறிவிக்கும் முறை இதுதானா? இருநாட்டுத் தரப்பும் இணைந்து அறிவிக்க வேண்டாமா? அத்தகைய உரிமையை டிரம்புக்கு கொடுத்ததன் மர்மம் என்ன?**

**“நமது எரிசக்தி பாதுகாப்பை நாமே தீர்மானிப்போம்” என்று சொல்லி வந்தோமே அது என்ன ஆனது? ‘இந்தியா எங்களிடம் வாங்க வேண்டும்’ என்றுகூட கோரிக்கை வைக்கலாம். ‘இன்னாரிடம் வாங்கக் கூடாது’ என்று நிபந்தனை விதிக்கும் உரிமையை யார் வழங்கியது?**

**“ இந்தியா ஏற்கனவே ரஷ்ய எண்ணெய் கொள்முதலை கணிசமாகக் குறைத்துவிட்டது.” என்றும் தகவல்கள் வெளியாகி வருகின்றன. அமெரிக்காவுக்கு முழுமையாகத் தலையாட்டுவதற்கு முன்பாகவே, அவர்களது விருப்பங்களை அடிபணிந்து அமல்படுத்தத் தொடங்கி விட்டார்கள் என்பதும் இதன் மூலம் தெரிகிறது.**

விவசாயப் பொருட்களை அமெரிக்காவிடம் இருந்து இந்தியா இறக்குமதி செய்யும் என்று டிரம்ப் கூறியிருப்பது மிகவும் மோசமான நடவடிக்கை ஆகும். ”நமது விவசாயிகளின் நலன்களில் எவ்விதச் சமரசமும் செய்து கொள்ளப்படாது” என்று ஆகஸ்ட் 15 அன்று பிரதமர் மோடி பேசியதை பொய்க்காக்கும் நடவடிக்கை ஆகும் இது.

அமெரிக்காவின் வேளாண்மைச் செயலாளர், “நாங்கள் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்வோம், எங்கள் (அமெரிக்க) விவசாயிகளுக்கு இதனால் பெரிய லாபம் கிடைக்கப்போகிறது” என்று சொல்லி இருக்கிறார். அப்படியானால் இந்திய விவசாயிகள் நஷ்டம் அடையப் போகிறார்கள் என்றுதானே பொருள்? அமெரிக்க உணவுப் பொருட்கள், பழங்கள், பால் பொருட்கள் போன்றவை மலிவான விலையில் இந்தியச் சந்தைக்குள் வரும். அமெரிக்க விவசாயிகளைக் காக்க டிரம்ப் முயற்சிக்கிறார். ஆனால் இந்திய விவசாயிகளை கைவிடுகிறார் மோடி.

**டிரம்ப் தனது சமூக வலைதளப் பதிவில், “அமெரிக்கப் பொருட்கள் மீதான அனைத்து வரி மற்றும் வரி அல்லாத தடைகளை இந்தியா பூஜ்ஜியமாகக் குறைக்கும்” என்று கூறி இருக்கிறார். அமெரிக்கப் பொருட்கள் மீது இந்தியா விதிக்கும் வரி பூஜ்ஜியமானால், அது மிகப்பெரிய தலைகீழ் மாற்றமாகும். அதனால் இந்தியாவிற்கு மிகப்பெரிய இழப்பு ஏற்படும்..**

இதற்கான எந்த விளக்கமும் இல்லாததாக பிரதமர் மோடியின் பதிவு உள்ளது. “ இந்தியப் பொருட்களுக்கு 18 சதவீத வரி விதிக்கப்படும் என்று அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார். 140 கோடி இந்தியர்களின் சார்பில் அவருக்கு நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன். ” என்று தெரிவித்துள்ளார்.

சந்தேகங்கள் எதற்கும் விளக்கம் அளிக்காத நன்றிப் பதிவு இது. எனவேதான் இது அச்சம் தருகிறது. இதனை மிகச்சரியாக விமர்சித்துள்ளார் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி. “ பிரதமர் மோடி சமரசம் செய்து கொண்டார். அமெரிக்காவில் அதானி மீது ஒரு வழக்கு உள்ளது. உண்மையில் அது மோடி மீதான வழக்கு. எப்ஸ்டீன் கோப்புகளில் இன்னும் வெளியிடப்படாத கோப்புகள் உள்ளன. இவை இரண்டும் அழுத்தத்துக்கான காரணிகள். இதை நாடு புரிந்து கொள்ள வேண்டும்” என்று ராகுல் சொல்லி இருக்கிறார்.

**மோடி பிம்பம் கிழியத் தொடங்கி இருக்கிறது.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (5.2.2026) தலைமைச் செயலகத்தில், 23-வது அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.02.2026) சென்னை, கலைவாணர் அரங்கில், தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க கைவினைப் பொருட்கள் மற்றும் கைவினைஞர்களின் திறனை உலக அளவில் பிரபலப்படுத்தும் விதமாக மாபெரும் கைவினைப் பொருட்கள் கண்காட்சியை திறந்து வைத்தார். இவ்விழாவில், அமைச்சர்கள் கே.என். நேரு, தா.மோ. அன்பரசன், பி.கே. சேகர் பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கைவினைப் பொருட்களின் கண்காட்சி – கருத்தரங்கத்தை தொடங்கி வைத்தார்!

# தமிழ்நாட்டின் சிறந்த கைவினைஞர்களுக்கு பூம்புகார் விருதுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, பிப். 6 -**

**தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி கழகத்தால் நடத்தப்பட்ட மாபெரும் கைவினைப் பொருட்களின் கண்காட்சி மற்றும் கருத்தரங்கத்தை தொடங்கிவைத்து, தமிழகத்தின் சிறந்த கைவினைஞர்களுக்கு பூம்புகார் விருதுகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.2.2026) சென்னை, கலைவாணர் அரங்கில், தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க கைவினைப் பொருட்கள் மற்றும் கைவினைஞர்களின் திறனை உலக அளவில் பிரபலப்படுத்தும் விதமாக மாபெரும் கைவினைப் பொருட்கள் கண்காட்சி மற்றும் கருத்தரங்கத்தினை (Mega Handicrafts Exhibitioncum Conference) தொடங்கி வைத்தார்.

மேலும், கைவினைத் தொழிலுக்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட 65 வயதுக்கு மேற்பட்ட 10 சிறந்த கைவினைஞர்களுக்கு வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதுகளையும், கைத்திறத் தொழிலின் பங்களிப்பு, அபிவிருத்தி மற்றும் படைப்புகள் ஆகியவற்றில் சிறந்த 10 கைவினைஞர்களுக்கு பூம்புகார் மாநில விருதுகளையும் வழங்கி சிறப்பித்தார்.

**மாபெரும் கைவினைப் பொருட்கள் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்**

இந்த மாபெரும் கைவினைப் பொருட்கள் கண்காட்சியில், தஞ்சாவூர் ஓவியம், சுடு களிமண், களிமண் பானை வகைகள், கலம்காரி, மூங்கில் வேலைப்பாடுகள், நார் பொருட்கள், தஞ்சாவூர் ஓவியம், தோடா சித்திர தையல் பொருட்கள், வாழைநார் பொருட்கள், குறும்பா ஓவியம், மர சிற்பங்கள், கற்சிற்பம் போன்ற பல்வேறு கலைப் பொருட்களின் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

மேலும், இக்கண்காட்சியில் கைவினைப் பொருட்கள் துறையில் ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டு சந்தைப் படுத்துதலுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல், கைவினைப் பொருட்கள் துறையில் புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துதல், கைவினைஞர்களின் குழுமங்கள் நிதி உதவி பெற அணுகு முறைக்கான வழிகாட்டுதல், கைவினைப் பொருட்களின் புவிசார் குறியீடு போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளும், கைவினைஞர்களின் தொழில் மேம்பாட்டிற்கான பல்வேறு கருத்தரங்கங்களும் நடைபெறுகின்றன.

**வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது**

கைவினைத் தொழிலில் தங்களின் வாழ்நாள் முழுவதும் பங்காற்றிய 65 வயதுக்கு மேற்பட்ட சிறந்த கைவினைஞர்களுக்கு தமிழ்நாடு அரசால் ”**வாழும் கைவினைப் பொக்கிஷம்**” விருது வழங்கப்படுகிறது. கைவினைஞர்களை பாராட்டுவதற்கும், அவர்களின் திறனை ஊக்குவிப்பதற்கும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தால் இவ்விருது ஆண்டுதோறும் 15 இலட்சம் ரூபாய் மதிப்பில் வழங்கப்பட்டு வருகிறது. வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதிற்காக ஒவ்வொரு கைத்திறத்தொழில்களின் பிரிவில் உள்ள கைவினைஞர்களுக்கு தலா 8 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பட்டயம், சான்றிதழுடன், ஒரு இலட்சம் ரூபாய் காசோலை வழங்கப்படுகிறது.

அதன்படி 2025-26ஆம் ஆண்டிற்கான ”வாழும் கைவினைப் பொக்கிஷம்” விருதுகளை - நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த சி.குளுந்தான் (பித்தளை கலைப் பொருட்கள்), தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த ந.ராஜேந்திரன் (இசைக்கருவி வீணை) மற்றும் கோ.ரெத்தினம் (தஞ்சாவூர் கலைத் தட்டு), சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த சோ.கோபால் (இசைக்கருவி -சீர்யாழ்) மற்றும் திருமதி. சி.இந்திரா (தஞ்சாவூர் ஓவியம்), செங்கல்பட்டு மாவட்டத்தை சேர்ந்த கோ. சுப்ரமணியம் (கற்சிற்பம்) மற்றும் தி.திருமூர்த்தி (மரச்சிற்பம்), சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த க.பால்ராஜ் (மரச்சிற்ப உட்பதிப்பு), கள்ளக்குறிச்சி மாவட்டத்தை சேர்ந்த எஸ்.எஸ். சங்கீதம் (மரச்சிற்பம்), கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த கி. சுப்பிரமணியன் (கோயில் நகைகள்) ஆகிய 10 விருதாளர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதிற்கான தலா ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை, 8 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பட்டயம் மற்றும் தகுதிச்சான்றிதழ் வழங்கி சிறப்பித்தார்.

**பூம்புகார் மாநில விருது**

“பூம்புகார் மாநில விருது” தமிழ்நாட்டின் 10 சிறந்த கைவினைஞர்களின் கைத்திறத் தொழிலின் பங்களிப்பு, அபிவிருத்தி மற்றும் படைப்புகளை கருத்தில் கொண்டு வழங்கப்படுகிறது. இவ்விருதுகள் ரூ.50,000/ பரிசுத் தொகை, 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பட்டயம் மற்றும் தகுதிச்சான்றிதழும் கொண்டதாகும்.

அதன்படி, 2025-26ஆம் ஆண்டிற்கான பூம்புகார் மாநில விருதுகளை - தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்த க.வெங்கடேஷ் (பஞ்சலோக சிற்பம்), திருமதி. சி.சங்கீதா (தஞ்சாவூர் ஓவியம்) மற்றும் அ. பாபு (தஞ்சாவூர் கலைத்தட்டு), விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. கு.ரீடா (உலோக தகட்டு வேலை) மற்றும் திருமதி. மு.ஷபானா (சுடுகளிமண் சிற்பம்), மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த சே.முருகன் (மரச்சிற்பம்), செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த அ.ராஜ் (கற்சிற்பம்), திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. அ.கவ்வாபீவி (பாய் நெசவு) கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி தே.செலின் மேரி (சித்திரத்தையல்) மற்றும் சின்ன காஞ்சிபுரத்தைச் சேர்ந்த மு.குமார் (காகித கூழ் பொம்மைகள்) ஆகிய 10 விருதாளர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பூம்புகார் மாநில விருதிற்கான தலா 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை, 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பட்டயம் மற்றும் சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தார்.

இவ்விழாவில், அமைச்சர்கள் கே.என். நேரு, எ.வ. வேலு, தா.மோ. அன்பரசன், மு.பெ.சாமிநாதன், மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர் பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் திருமதி வே. அமுதவல்லி, தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ச. அமிர்த ஜோதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஒன்றிய அரசின் தொழிற் வளர்ச்சித்துறை – புத்தாக்க நிறுவனங்களில்–

# பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்கான வழிமுறைகளை வகுத்துள்ளதா?

## மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, பிப்.5–

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் 03.2.2026 அன்று மக்களவையில் புத்தாக்க நிறுவனங்களில், பெண்கள். தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான விகிதாச்சர முறை பின்பற்றப்படுகிறதா? என்றும் அவர்களை ஊக்குவிக்க தேவையான வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளனவா? என்றும் நிதியுதவி அளிப்பதில் இந்தப் பிரிவினருக்கான சலுகைகள் ஏதும் அளிக்கும் திட்டம், ஒன்றிய அரசிடம் உள்ளதா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் வர்த்தகத்



துறை இணையமைச்சர் ஜித்தின் பிராசாதாவிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் மாண்புமிகு வர்த்தகத் துறை இணைய மைச்சர் அளித்த பதில் பின்வருமாறு:

கடந்த 31 டிசம்பர் 2025 நிலவரப்படி 30 மாநிலங்கள், மற்றும் 6 யூனியன் பிரதேசங்கள் ஆகியவற்றில் மொத்தமாக 2,07,135 நிறுவனங்கள் புத்தாக்க நிறுவனங்கள் என கண்டறியப்பட்டுள்ளது என்றும் இவற்றில் 99687 நிறுவனங்கள் பெண் இயக்குநர்கள் மற்றும் பங்குதாரர்களை கொண்டிருப்பதால் 48 சதவீதம் அளவிற்கு பெண்களின் பங்களிப்பு உள்ளது என்றும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலத்தை மேம்படு;த்தும் வகையில் கடன்உறுதியளிப்பு திட்டம், திறன் மேம்பாட்டு பயிற்சி, மற்றும் பொருட்களை சந்தைப்படுத்தும் திட்டம், வங்கி கடன்களில் பல்வேறு சலுகைத் திட்டங்களை சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்துறை,

ஒன்றிய அரசின் வழியாக அளித்து வருகிறது என்றும் பிரதம மந்திரி விராசத் கா சம்வர்தன் என்ற திட்டம் மூலம், மதச் சிறுபான்மையினருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி, சிறுபான்மை நலத் துறையின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது என்றும், திறன் மேம்பாட்டுஅமைச்சகத்தின் மூலம் கணினி இணையதளம் வழியாக சந்தைப்படுத்துதல், கடன் வசதி திட்டம், திறன் மேம்பாடு ஆகியவற்றில் பயிற்ச அளிக்கப்படுகிறது என்று இணையமைச்சர் தெரிவித்தார்.

இந்திய தொழிற்சாலைகள் மேம்பாட்டு வங்கியின் கீழ் செயல்பட்டு வரும் புத்தாக்க நிதியத்தின் உதவியுடன் அனைத்து புத்தாக்க நிறுவனங் களுக்கும், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு, கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூபாய் 20836 கோடிகள் வழங்கப்பட்டுள்ளது என்றும் தமிழ்நாட்டிற்கென ரூபாய் 1071 கோடிகள் மட்டும் வழங்கப்பட்டுள்ளது என்றும் இணையமைச்சர் தெரிவித்தார்.

மேலும் துவக்க நிலையுள்ள புத்தாக்க நிறுவனங்களுக்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் அனைத்து மாநிலங்களுக்குமாக ரூபாய் 591 கோடிகள் அளவிற்கு நிதியுதவி செய்யப்பட்டுள்ளது என்றும் தமிழ்நாட்டிற்கென ரூபாய் 57 கோடிகள் மட்டும் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது என்றும் கடன் உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் இந்திய மாநிலங்களுக்கென ரூபாய் 809 கோடிகள் வழங்கியுள்ள நிலையில் தமிழ் நாட்டிற்கென புத்தாக்க நிறுவனங்க ளுக்கென ரூபாய் 84 கோடிகள் மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.